செ.வெ.எண்:47 நாள்:30.01.2017

# அரியலூரில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் இன்று (30.01.2017) நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், திங்கட்கிழமை **“மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்”** இன்று (30.01.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 502 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இம்மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திரு.பா.ரெங்கராஜன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.யோகேஸ்வரி, துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத் திட்டம்) திருமதி.மங்கலம் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**